www.tamilarangam.net

# மே தினம் !



தன்முயற்சியிலே சற்றும் தளராத முதலாளித்துவம், உலகத் தொழிலாளவர்க்கத்தின் இரத்தத்தை உறிஞ்சி....... அதன் எலும்புத் தோள்களிலே மேலும் மேலும் பாரிய சுமைகளைச் சுமத்தி வரும் இந்தவேளையிலே..........

ஆதிக்க வெறிபிடித்த ஏகாதிபத்தியங்களின் இரும்புக்கரங்கள் மூன்றாவது உலக நாடுகளின் கருத்துக்களை நெரித்து அவைகளை மூச்சுத் திணற வைக்கும் இந்த வேளையிலே........

உலகம் முழுவதுமே சிறுபான்மை இனமக்களின் உரிமைப் போராட்டங்கள் இராணுவச்சப்பாத்துக்களால் மிதித்து நசுக்கப்படும் இந்த வேளையிலே.......

அணு ஆயுதங்கள்ம், நவீன ஆயுதங்களும் மட்டுமன்றி இவற்றோடு இனவெறியும், நிறவெறியும் இணைந்து உலகமக்களின் உள்ளங்களிலே மரணபயத்தை விதைத்து வரும் இந்த வேளையிலே ......

www.tamilarangam.net

இன வெறிக்கும், இரத்த வெறிக்கும் இடையிலே அகப்பட்டு இந்து சமுத்திரத்தில் இரத்தத்துளியாய் எமது தேசம் துடித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையிலே......

இத்தனை இருளிலும் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றாய் இன்னுமொரு மேதினம் உரிமைகான போராட்டங்கள் தோற்றுப்போய்விடாது என இரத்த சாட்சியம் சொல்லும் இன்னுமொரு மேதினம் உழைக்கும் மக்களாயிருந்தாலென்ன..... ஒடுக்கப்படும் மக்களாயிருந்தாலென்ன ஓரணியில் நின்று போராடினால் வெற்றி நிட்சயம் என்பதை அடித்துச்சொல்லும் இன்னுமொரு மேதினம்......

இந்த வேளையிலே...............

அன்றாடவாழ்வே கேள்விக்குறியாகிப்போன எமது மக்களும்....கந்தக பூமியாய் மாறிப்போய்விட்ட எங்கள் தேசத்துக்கும் இழைக்கப்படும் கெடுமைகளைப் பகிரங்கப்படுத்தலையும் எங்கள் மக்களது துயரங்களுக்கு முற்றுப்புள்ளிவைத்து அவர்கள் சுயநிர்ணய உரிமையோடு வாழுதற்கான வழிகளை கண்டறிதலையும் எமது முக்கிய கடமையாகக் கொள்வோம்.

ஒருபுறம் இனவெறிபிடித்த சிறிலங்கா அரசாங்கம் தனக்குக் கிட்டி வரும் சர்வதேச உதவிகளை தமிழ் பேசும் மக்களுக்கெதிரான ஒரு மிலேச்சத்தனமான யுத்தத்திற்க பயன்படுத்திவருகிறது. குண்டு வீச்சுக்களும், ஷெல்லடிகளும், இராணுவக் கொலைவெறியாட்டங்களும் மட்டுமல்ல இனவாத அரசு திட்டமிட்டு விதித்திருக்கும் பொருளாதாரத் தடையும் எம்மக்கள் எண்ணற்றோரின் உயிர்களைச் சூறையாடிவருகிறது.

மறுபுறம் விடுதலைப் புலிகளின் ஆயுததர்பாரின் கீழே.... சுதந்திரத்திற்கான போராட்டத்தில்.... சுதந்திரம் மறுக்கப்பட்டவர்களாய் எமது மக்கள்...... பேச்சு, எழுத்து, அரசியல் சுதந்திரங்கள் மட்டுமல்ல இன்று தமது உயிர்களைக் காப்பாற்றும் சுதந்திரம் கூட எமது மக்களுக்கு புலிகளால் மறுக்கப்படுகிறது.

இவற்றுக்கிடையில் ஜீவமரண போராட்டத்தை நடத்தும் எமது மக்களை பகடைக்காய்களாய் வைத்து அரசும், புலிகளும் நடத்தும் போர்நிறுத்த -பேச்சுவார்த்தை விளையாட்டுக்கள் ....

www.tamilarangam.net

இதிலே வேடிக்கை என்னவென்றால் சிங்கள உழைக்கும் வர்க்கம், மலையக மக்கள், வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இவர்களை தனது இராணுவக் கால்களால் நசுக்கும் சிறீலங்கா இனவாதஅரசும் மேதினத்தை கேளிக்கை விழா வாய் கொண்டாடுவதும் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைப் பறித்து ....... முஸ்லீம் மக்களை அவர்கள் வாழ்ந்த சொந்த மண்ணைவிட்டு அடித்து விரட்டி...... அப்பாவிச் சிங்கள மக்களை, பெண்களை, குழந்தைகளை கிராமங்களில் புகுந்து வெட்டிக்கொன்று அராஜகத்தின் மொத்தச் சொந்தக்காரராகிவிட்ட புலிகளும் மேதினத்தைக் கொண்டாடுவதும்தான்

அன்பார்ந்தவர்களே இத்தகையதொரு இக்கட்டான சூழ் நிலையில் எம் மக்கள் இன்று அனுபவிக்கும் மிக மோசமான துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர நாம் முனையவேண்டும். வெறுமனே நமக்கு நாமே மகுடம் சூட்டி `அதுபிழை! இதுசரி!´என்ற உப்புச் சப்பற்ற ..... பொழுதுபோக்கு விவாதங்களை நடத்துவதையும், சேறடித் தலையும் விட்டு எமது மக்கள் உரிமைகளைப் பெற்று வாழுவதற்குரிய வழிகளை ஆரோக்கியமான கலந்துரையாடல்களின் மூலம் கண்டறிய வேண்டும்.

ஓரணியில் நின்று எமது மக்களுக்கெதிராக சிறீலங்கா அரசு இழைத்து வரும் கொடுமைகளை சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்த வேண்டும். இதன் மூலம் உலக அரங்கில் சிறீலங்கா இனவாதஅரசை தனிமைப்படுத்தி தோற்கடிக்கவேண்டும்.

இவற்றை நாம் இன்னமும் செய்யத்தவறின் ஒரு முழு அழிவிலிருந்து எமது மக்களையும், தேசத்தையும் யாராலுமே காப்பாற்ற முடியாது.

மேதினம் என்பது வெறுமனே கொடிபிடிப்பதும், கோஷம் போடுவதும் அல்ல. அது ஒரு உறுதியான இலட்சியத்தை வென்றெடுக்க இறுதிவரைபோராடி இரத்தம் சிந்திய வரலாற்றுத்தினம்.

எனவே இம்முறை மேதினத்தின்போது எமது வேறுபாடுகள் அனைத்தையும் ஒதுக்கி எமது மக்களின் நலனை மனங்களில் பதிப்போம் .

உலகத்தொழிலாளர்களே ! ஒடுக்கப்படும் மக்களே !

இணைந்து போரிடுவோம் !

www.tamilarangam.net

## 'ஆண்ட பரம்பரை' ???

''ஆண்ட பரம்பரை''யாம்
யாரவர்கள்?
அவர்களுக்கும் எங்களுக்கும்
என்ன சம்பந்தம்?
மொழியின் பேராலும் இனத்தின் பேராலும்
எங்களையும் அவர்களோடு
இணைத்துப் பேசுகிறார்களே;
ஒருவேளை நாங்களும் அவர்களுள்
அடங்குவோமோ?
இல்லையே!

எங்கள் கரங்களின் உழைப்பு
செம்மண் தரைகளில்
உடைமை வர்க்கத்தால் சுரண்டப்பட்டன
எங்கள் மனிதத் தேவைகள்
சுரண்டும் மிருகங்களால்
மீண்டும் மீண்டும் அழிக்கப்பட்டன!
எங்கள் ஆத்ம விருப்பங்கள்
ஆதிக்க நகங்களால்
கீறிக் கீறிக் கிழிக்கப்பட்டன!
எங்கள் பள்ளிச் சிறுவர்கள்
பாடசாலையில்
எழுந்து நின்றே படித்துக் கொண்டன(ர்)!

'சங்கிலியன்'களும்
'பண்டார வன்னியன்'களும்
என்ன நம்மைப்போல்
உழைக்க நிலமில்லாதவர்களா?
இருக்க வீடில்லாதவர்களா?
உண்ண உணவில்லாதவர்களா?
இல்லை!
இவர்கள் எல்லாமிருந்தவர்கள்
எல்லாமுள்ள வர்க்கத்தின் பிரதிநிதிகள்!
ஆனால் நாங்கள்
''இழப்பதற்கு எதுவுமற்றவர்''கள்
எனவே; இந்தப் பரம்பரைக்கும்
நமக்கும் என்ன சம்பந்தம்?

நாங்கள் 'கூலி'யின் பேராலும்
சாதியின் போராலும்
சமுதாயத்தின் கீழ்தட்டில்
அடுக்கப்பட்டவர்கள
ஆம் நாம் ஒடுக்கப்பட்டவர்கள்!
நாங்கள் கலட்டித் தரையிலும்
சுடலை மேட்டிலும்
உவர்நிலத்திலும் ஒதுக்குப்புறத்திலும்
வாழச்சொல்லி நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்!

யாரால்? யாரால்? யாரால்?
ஆண்ட பரம்பரையால்.
நிலப்பிரபுத்துவ மன்னர்கள் முதல்
நிறம் வெளுத்த 'எம். பி'க்கள் வரை
அரசுக்கட்டில் அமர்ந்திருநத
ஆண்ட பரம்பரையால்!

ஆம்! தோழர்களே!
இவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை
இவர்களோடு நமக்கு சமரசமுமில்லை!
மீண்டும் இவர்கள் ஆளுவதற்காக
மாண்டு போக எங்களை வரட்டாம்;

வாருங்கள் தோழர்களே!
மாற்றி எழுதுவோம்
இவர்கள் வகுத்த தீர்ப்பினை
இனிமேல் ஆளப்போவது
ஆண்ட பரம்பரையல்ல
ஆளப்பட்ட பரம்பரை

ஆதிக்க வேர்களை அறுத்து வீசவும்
அடக்குமுறைப் பற்களை
பிடுங்கி எறியவும்
சாதிக்க வல்ல சக்தியே எழுக!
இனிமேல் ஆளப்போவது
ஆண்டபரம்பரையல்ல
ஆளப்பட்ட பரம்பரை...

——சூரியன்

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை**
**முன்னணி EPRLF**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்